**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**மேட்டூர்.**

**OS.No.** 23/2014

**வழக்கு சாட்சி DW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மலர்விழி | கணவர் பெயர் | : தாமரைசெல்வன் |
| தகப்பனார் பெயர் | --- | வயது | : 56 |
| கிராமம் | கோனூர் | நாள் | : 08.01.2026 |
| தாலுகா | மேட்டூர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 30.10.1969ம் தேதியிட்ட என் மாமியார் மாதம்மாள் பெயரிலுள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகும்.

2. 23.07.1970ம் தேதியிட்ட என் மாமியார் மாதம்மாள் பெயரிலுள்ள கிரைய பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.8** ஆகும்.

3. என் மாமியார் மாதம்மாளுக்கு மேட்டூர் வட்டாட்சியர் அவர்கள் சிறு விவசாயிகள் மின் இணைப்பு பெற தகுதி உள்ளவர் என 04.03.1985ம் தேதியில் வழங்கிய சான்று அசல் **பி.வா.சா.ஆ.9** ஆகும்.

4. என் மாமியார் மாதம்மாளுக்கு 28.03.1985ம் தேதியில் மின் இணைப்பு கொடுத்தற்கான ஆவணம் அசல் **பி.வா.சா.ஆ.10** ஆகும்.

5. 24.06.1998ம் தேதியில் என் மாமியார் மாதம்மாள் பெயரிலிருந்த மின் இணைப்பை 1ம் பிரதிவாதி மாற்றியதற்கான உத்தரவு அசல் **பி.வா.சா.ஆ.11** ஆகும்.

6. இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.215/1998ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.12** ஆகும்.

7. இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.225/1998ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.13** ஆகும்.

8. மேட்டூர் சார்வு நீதிமன்றத்தில் மே.மு.எண்.26/2001 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.14** ஆகும்.

9. மேட்டூர் சார்வு நீதிமன்றத்தில் மே.மு.எண்.27/2001 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.15** ஆகும்.

(பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆகிய ஆவணங்களில் கண்ட சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றும், பி.வா.சா.ஆ.9, பி.வா.சா.ஆ–10 ஆகிய ஆவணங்களில் தவறான சங்கதிகள் சொல்லி மின் இணைப்பு பெற்றுள்ளதாகவும், பி.வா.சா.ஆ.11 முதல் பி.வா.சா.ஆ.15 வரையிலான நீதிமன்ற தீர்ப்புகளுக்கும், வாதிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் வாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவித்ததால் அவர்களது ஆட்சேபனையோடு மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது).

(கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வழக்கு 20.01.2026 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.